www.Padasalai.Net www.TrbTnpsc.com

தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6
முன்னிலை:முனைவர்.பூ.ஆநரேஷ்
ந.க.எண்: 004634 /ஜ1/2025, நாள்: .05.2025

பொருள்: தொடக்கக்கல்வி – பொதுமாறுதல் கலந்தாய்வு – 2025-26 ஆம் கல்வி ஆண்டு - தற்போதைய ஒன்றியத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் (30.04.2025) பணிபுரியும் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு பொது மாறுதல் கலந்தாய்வு நடத்துதல் – சார்ந்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.149, பள்ளிக் கல்வி (ஜி) துறை, நாள்.28.08.2008
2. அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக் கல்வி [பக1(1)]த்துறை, நாள்.09.09.2022

****

தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் மொத்தம் 851 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடம் உள்ளது. வட்டாரக் கல்வி அலுவலர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள நிர்வாக பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

1. தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளை ஆண்டாய்வு மற்றும் பள்ளி மேற்பார்வையிடுதல்.
2. தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் மற்றும் பிற பணப்பலன்கள் பெற்று வழங்குதல்.
3. தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களின் முன்னுரிமை பட்டியல் தயாரித்தல் மற்றும் பதவி உயர்வு வழங்குதல்.
4. தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களின் ஓய்வூதிய பணப்பலன்கள் பெற்று வழங்குதல்.

ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட்டு வந்தது. கடைசியாக 2021-2022 ஆம் கல்வி ஆண்டில் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட்டது. தற்போது 2025-2026ஆம் கல்வியாண்டில் வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கான கலந்தாய்வு நடைபெறவுள்ளது. அக்கலந்தாய்வில் ஒன்றியங்களில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்கள் கட்டாயமாக பொதுமாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ளவேண்டும். இப்பொதுமாறுதல் கலந்தாய்வில் 30.06.2025 -ல் ஓய்வு பெற இருக்கும் வட்டாரக்கல்வி அலுவலர்கள், தற்போது பணிபுரியும் வட்டாரக்கல்வி அலுவலகத்தில் பணியேற்று மூன்று ஆண்டுகள் நிறைவு பெற்றிருந்தாலும், அவர்களுக்கு இப்பொதுமாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்துகொள்பவர்களின் முன்னுரிமை அவர்கள் பணிபுரியும் ஒன்றியங்களில் பணியில் சேர்ந்த தேதியின் அடிப்படையில் முன்னுரிமை தயார் செய்யப்பட்டு மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படும். ஒன்றியங்களில் பணியில் சேர்ந்த தேதி ஒன்றாக இருக்கு பட்சத்தில் அவர்கள் முதன் முதலில் வட்டாரக் கல்வி அலுவலராக பணியில் சேர்ந்த தேதியின் அடிப்படையிலும், முதன் முதலில் வட்டாரக் கல்வி அலுவலராக பணியில் சேர்ந்த தேதியும் ஒன்றாக இருக்கும் பட்சத்தில் அவர்களின் பிறந்த தேதியின் அடிப்படையிலும் (வயதில் மூத்தவர்களுக்கு முன்னுரிமை), பிறந்த தேதியும் ஒன்றாக இருக்கும் பட்சத்தில் வட்டாரக் கல்வி அலுவலர்கள் பெயரின் ஆங்கில எழுத்து வரிசையின் படியும் முன்னுரிமை நிர்ணயம் செய்யப்படும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

மேற்குறிப்பிட்டவாறு ஒன்றியங்களில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பணிபுரிந்து வரும் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு கீழ் குறிப்பிட்ட வழிமுறைகளின் அடிப்படையில் 2025-26 ஆம் கல்வியாண்டிற்கான பொது மாறுதல் கலந்தாய்வு நடைபெற உள்ளது.

1. 2025-2026ஆம் கல்வியாண்டில் வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கான பொதுமாறுதல் கலந்தாய்வு மாநில முன்னுரிமைப்பட்டியலின் படி முதலில் மாவட்டத்திற்குள்ளான மாறுதல் காலந்தாய்வும், பின்னர் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கலந்தாய்வு நடைபெறும்.

2. மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொண்டவர்களின் முன்னுரிமை அவர்கள் முதன் முதலில் வட்டாரக்கல்வி அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த தேதியின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும். வட்டாரக்கல்வி அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த தேதி ஒன்றாக இருக்கும் பட்சத்தில் தற்போது பணிபுரியும் ஒன்றியத்தில் பணியில் சேர்ந்த தேதியின் அடிப்படையில் முன்னுரிமை நிர்ணயம் செய்யப்படும்.

3. ஒரே ஒன்றியங்களில் 30.04.2025 (crucial date) நிலவரப்படி 3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் கட்டாயமாக பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள வேண்டும்.

4. பார்வை 1-இல் கண்டுள்ள அரசாணையில் பணிமாறுதல் / பதவி உயர்வு மூலம் வட்டாரக் கல்வி அலுவலராக பணிபுரிபவர்கள் தாங்கள் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்களாக பணிபுரிந்த ஒன்றியங்களில் வட்டாரக் கல்வி அலுவலர்களாக பணிநியமனம் வழங்க கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் தெரிவித்துள்ளவாறு வட்டாரக் கல்வி அலுவலர்கள் கடைசியாக நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்களாக பணிபுரிந்த ஒன்றியங்களை தவிர மற்ற ஒன்றியங்களுக்கு மாறுதலில் செல்லுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

5. பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்துக்கொள்ளும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் தற்போது பணிபுரியும் ஒன்றியம் மற்றும் அதற்கு முன்னர் பணிபுரிந்த ஒன்றியத்திற்கு மீளவும் மாறுதல் கோரக் கூடாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

6. 2025-2026 ஆம் கல்வி ஆண்டில் ஓய்வு பெறும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் தற்போதைய ஒன்றியத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்திருந்தாலும் பொது மாறுதல் கலந்தாய்வில் 30.06.2025 வரை ஓய்வு பெற உள்ளவர்களுக்கு கலந்தாய்வில் கலந்துக்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

இதற்கு முந்தைய பொது மாறுதல் கலந்தாய்வில் வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கு முதலில் மாவட்டத்திற்குள்ளும், பின்னர் மாவட்டம் விட்டு மாவட்டம் கலந்தாய்வும் நடத்தப்பட்டு வந்தது. அதே முறையையே பின்பற்றி தற்போதும் முதலில் மாவட்டத்திற்குள்ளும் பின்னர் மாவட்டம் விட்டு மாவட்டமும் பொதுமாறுதல் கலந்தாய்வு நடத்தப்படும்.

தற்போது பணிபுரியும் ஒன்றியங்களில் மூன்று ஆண்டுகளுக்கு (30.04.2025) மேல் பணிபுரியும் வட்டாரக்கல்வி அலுவலர்கள் பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ளுவதற்கு இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதினை பூர்த்தி செய்து சார்ந்த மாவட்டக்கல்வி அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். பெறப்பட்ட விண்ணப்பங்களை கையொப்பமிட்டு, Scan செய்து deeisection@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

www.Padasalai.Net

மேலும், 2025-26 ஆம் ஆண்டிற்கான பொது மாறுதல் கலந்தாய்வுக்கான கால அட்டவணையினை அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பி வைத்தும், வட்டாரக்கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் பொது மாறுதல் கலந்தாய்வு தொடர்பான விண்ணப்பங்களின் விவரங்களை கல்வி மேலாண்மை தகவல் முகமையில் (EMIS) பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக்கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. கலந்தாய்வு அட்டவணை
2. விண்ணப்ப படிவம்

தொடக்கக்கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்ட க்கல்வி அலுவலர்கள் ( தொடக்கக்கல்வி)

நகல்

சென்னை-06 , மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது. (EMIS)

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# தொடக்கக் கல்வி இயக்ககம்

2025-2026 ஆம் கல்வி ஆண்டு வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு அட்டவணை

| வ.எண் | விவரம் | நாள் |
|---|---|---|
| 1 | மாறுதலுக்கான விண்ணப்பம் சமர்ப்பித்தல் (ஒன்றியத்தில் மூன்று ஆண்டுகள் பணிமுடித்தவர்கள்) | 07.05.2025 to 09.05.2025 |
| 2 | மாறுதல் கலந்தாய்விற்கான வட்டாரக்கல்வி அலுவலர்களின் முன்னுரிமைப்பட்டியல், மற்றும் தகுதிவாய்ந்தோர் பட்டியல் ஆகியவை EMIS இணைய தளத்தில் வெளியிடுதல். | 12.05.2025 |
| 3 | மாறுதல் முன்னுரிமை பட்டியல், தகுதிவாய்ந்தோர் பட்டியல் மற்றும் காலி பணியிடத்தில் திருத்தம் மற்றும் முறையீடுகள் ஏதும் இருப்பின் சரி செய்தல் | 13.05.2025 |
| 4 | இறுதி மாறுதல் முன்னுரிமைப்பட்டியல், தகுதிவாய்ந்தோர் பட்டியல் மற்றும் காலிப்பணியிடம் விவரம் வெளியிடுதல் | 15.05.2025 |
| 5 | வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு நடைபெறும் நாள். | 16.05.2025 |

தொடக்கக் கல்வி இயக்குநர்

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# தொடக்கக் கல்வி இயக்ககம்

2025-2026 ஆம் கல்வி ஆண்டில் வட்டாரக்கல்வி அலுவலர்கள் மாறுதல் கோரும் விண்ணப்பம் (ஒன்றியத்தில் மூன்றாண்டு பணி முடித்தவர்கள்)

(பொருத்தமானவற்றை ☐ குறியிட்டுக் காட்டுக)

| | | |
|---|---|---|
| 1 | பெயர்-தமிழில் | |
| | In English (Block Letters) | |
| | அலுவலரின் IFHRMS Number | |
| | அலுவலரின் DDO Code | |
| 2 | பதவி | |
| 3 | ஒன்றியம் | |
| | கல்வி மாவட்டம் | |
| | மாவட்டம் | |
| 4 | பிறந்த தேதி | |
| 5 | முதன் முதலில் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியராகப் பணியேற்ற தேதி | |
| 6 | நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியராக பணியாற்றிய ஒன்றியம் மற்றும் மாவட்டம் | |
| 7 | முதன் முதலில் வட்டாரக்கல்வி அலுவலராக பணியேற்ற தேதி | |
| 8 | தற்போது பணிபுரியும் வட்டாரக்கல்வி அலுவலக ஒன்றியம், மாவட்டம் மற்றும் பணியேற்ற நாள் | |
| 9 | இதற்கு முன்னர் பணியாற்றிய வட்டாரக்கல்வி அலுவலக ஒன்றியம், மாவட்டம் மற்றும் பணியேற்ற நாள் | |

| வ.எண் | ஒன்றியம்/அலுவலகம் | பணிக்காலம் | | மாறுதலில் வந்ததற்கான காரணம் (நிர்வாகம் / விருப்பம்) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முதல் | வரை | | | | |
| i | | | | | | | |
| ii | | | | | | | |
| iii | | | | | | | |

| | | |
|---|---|---|
| 10 | மாறுதல் கோரும் ஒன்றியம் மற்றும் மாவட்டம் | 1.<br>2.<br>3. |
| 11 | மாறுதல் கோருவதற்கான காரணம் | |

குறிப்பு: நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியராக பணியாற்றிய ஒன்றியத்திற்கும், தற்போது பணிபுரியும் ஒன்றியம் மற்றும் அதற்கு முன்னர் பணியாற்றிய ஒன்றியத்திற்கும் மாறுதல் கோரமாட்டேன் என இதன் மூலம் உறுதியளிக்கிறேன். . மேலே கண்ட விவரங்கள் யாவும் உண்மையானவை எனவும் உறுதி கூறுகிறேன்.

வட்டாரக்கல்வி அலுவலர்
(அலுவலக முத்திரையுடன்)

மேற்காணும் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு சரியாக உள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது. தொடக்கக்கல்வி இணை இயக்குநர் (நிர்வாகம்) அவர்களுக்கு பரிந்துரை செய்து பணிந்தனுப்பலாகிறது.

மாவட்டக்கல்வி அலுவலர்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com